
# எவ்வாறு தீமையும் மற்ற எல்லா மோசமான விஷயங்களும் உலகத்திற்குள் நுழைந்தன

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! ஆதாமின் பாவத்தைப் போல, தங்களுடைய பாவமும் அவர்களை உமது சமூகத்தில் இருந்து பிரிக்கிறது என்பதையும், உம்மோடு எப்போதும் வாழ அவர்களுக்கு உமது மன்னிப்பு தேவை என்பதையும் எச்சரிக்க இந்தப் பாடத்தை உபயோகிப்பீராக."



**ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில்** உள்ள ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமை பற்றிய கதையை ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ கூறட்டும். அது, ஒரு பாம்பின் உடலை உபயோகித்தால் எவ்வாறு சாத்தான், ஆதாம் ஏவாள் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போகும்படி சோதித்தான் என்பதைக் கூறுகிறது. தேவன் பரிசுத்த மானவர் என்பதால், அவர்களைத் தமது சமூகத்தில் இருந்து துரத்தி சாகும்படி விட்டுவிட்டார்.



கதையைக் கூறிய பின் பின் வரும் கேள்விகளைக் கேட்கவும் *(பதில் ஒவ்வொரு கேள்வியையும் பின் தொடர்கிறது)*

- கனியை அவள் புசிக்கக் கூடாது என்று தேவன் விரும்பினார் என்பது ஏவாளுக்கு எப்படி தெரியும்? *(3)*
- ஏவாளுக்கு கனியைப் புசிக்கும் விருப்பம் உண்டாக்க சாத்தான் கூறிய பொய்கள் என்ன? *(4-5)*
- ஆதாம் ஏன் கனியைப் புசித்தான்? *(6)*
- தங்கள் கீழ்ப்படியாமைக்கு ஆதாமும், ஏவாளும் யாரைக் குற்றப்படுத்தினர்? *(12-13)*
- ஒரு பெண்ணின் குழந்தையால் அவனுக்கு என்ன நேரிடும் என்று தேவன் சாத்தானிடம் கூறினார்? *(15)*
- ஏவாளுக்கு தண்டனையாக தேவன் கூறியது என்ன? *(16)*
- ஆதாமுக்கு தண்டனையாக தேவன் கூறியது என்ன? *(17)*
- அவர்கள் தோட்டத்தில் தேவ சமூகத்தை விட்டு வெளியேறக் காரணம் என்ன? *(வச.22-24)*

ஆதியாகமம் 3 ல் உள்ள மனிதனின் ஆதி பாவத்தின் கதையின் சில பகுதிகளை **நாடகமாக்குக.**

- சபைத்தலைவரோடு பேசி பிள்ளைகள் ஆராதனையின் போது நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும். எல்லா பகுதிகளையும் உபயோகிக்க தேவை இல்லை.
- உங்கள் நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி பிள்ளைகள் இந்த நாடகத்தை ஆயத்தம் செய்ய உதவவும்.
- **பெரிய பிள்ளைகள்** சிறியவர்களுக்கு உதவி செய்யவும்.
- பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் ஏற்க வேண்டிய பாத்திரங்கள்: **கதை கூறுபவர், ஆதாம், ஏவாள்** (சில பெரிய இலைகளை வைத்துகொள்ளவும்), தேவ குரல், பாம்பு (பழத்தைக் குறிக்க எதையாவது வைத்துக்கொள்ளுங்கள்)
- **இளம் பிள்ளைகள், மிருகங்கள், தேவதூதர்கள்** (ஒரு வாளை வைத்துக் கொள்ளவும்) வேடம் ஏற்கலாம்.

**கதை கூறுபவர்:** ஆதி.3:1-6 லிருந்து கதையின் முதற் பகுதியைக் கூறவும். பின் "ஆதாம் ஏதேனில் மிருகங்களுக்குப் பேரிட்டான். விலங்குகள் நடப்பதைப் பாருங்கள்!"

**ஆதாம்** : ஒவ்வொரு மிருகமாகக் காட்டி, "இந்த மிருகத்ததுக்கு நான் என்ன பெயர் வைக்கலாம்?"

**கதை கூறுபவர்:** "சாத்தான் பாம்பாக வேடமாறி வந்து என்ன கூறுகிறான் என்பதைக் கேளுங்கள்."

பாம்பு : சத்தமாக சீறுதல். பின் ஏவாளிடம், “ஏவாள்! கேள்!” (சீறி, பழத்தை அவளை நோக்கி நீட்டுதல்). “இந்தத் தோட்டத்தில் உள்ள ஏதாவது பழத்தை உண்ணக் கூடாது என்று தேவன் கூறி இருக்கிறாரா?”

ஏவாள் : “ஓ! இந்த சர்ப்பம் எவ்வளவு அழகாய் இருக்கிறது.” (பழத்தைக் காட்டி) “இல்லை! தோட்டத்தின் நடுவில் இருக்கும் மரத்தின் கனியைத் தவிர எந்தக் கனியையும் தின்னலாம் என்று தேவன் கூறினார். அதைப் புசித்தால் நாங்கள் இறந்து விடுவோம்.”

பாம்பு : சத்தமாகச் சீறி, பின் கூறுகிறது: “இல்லை! ஏவாளே! நீங்கள் சாக மாட்டீர்கள். நீங்கள் தேவனைப் போல ஞானமுள்ளவர்கள் ஆவீர்கள். பாவம் என்ன என்பதை அறிவீர்கள்” (கொடூரமாக சிரிக்கிறது).

ஏவாள் : “அந்தப் பழம் பார்க்க சுவையுள்ளதாகத் தோன்றுகிறது. குறுகுறுப்பாய் எனக்கு உணர்வு தோன்றுகிறது. பாவம் இன்னதென்று அறிய விரும்புகிறேன். நான் தேவன் சொன்னதைப் பற்றி கவலைப்படவில்லை. நான் அவரை மீறி எதை வேண்டுமானாலும் சாப்பிடுவேன்.” (ஏவாள் பழத்தை எடுத்து, கொஞ்சம் சாப்பிட்டு, பின் ஆதாமிடம் கொடுப்பது போல் நடிக்கவும்) “இந்த சுவையான பழத்தை என்னோடு சேர்ந்து சாப்பிடுங்கள்.”

ஆதாம் : “ஏவாள்! அதை சாப்பிடக் கூடாது என்று தேவன் கூறினார். ஆனால் நீ மீறினால் நானும் மீறுவேன். தீமை என்ன என்பதை நானும் அறிய விரும்புகிறேன்.”

பாம்பு : சிரித்து, சீறி, பின் கூறுகிறது: “நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிய மறுக்கிறீர்கள். இனி அவரிடம் இருந்து உங்களை விரட்டி விடுவார்.” (சீறி சிரிக்கிறது).

கதை கூறுபவர்: ஆதி 3:7-13 லிருந்து கதையின் மூன்றாம் பகுதியைக் கூறி பின், “ஆதாம் கூறுவதைக் கேளுங்கள்.”

ஆதாம் : “ஏவாள்! நாம் என்ன செய்து விட்டோம்? நாம் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை! நான் இப்போது நிர்வாணியாக உணர்கிறேன்.”

ஏவாள் : “இதோ சில பெரிய அத்தி இலைகள் உள்ளன. நான் அவற்றை தைத்து நமக்கு ஆடை உண்டாக்குவேன்.”

தேவ குரல்: (சத்தமாக) “ஆதாம்! ஆதாம்! எங்கே இருக்கிறாய்? நீ மகிழ்ச்சியாய் இருக்க நான் செய்த இந்த தோட்டத்தில் உன்னோடு சேர்ந்து உலாவ நான் வந்தேன்.”

ஆதாம் : “நான் நிர்வாணியாக இருப்பதால் பயந்து ஒளித்துக் கொண்டு இருக்கிறேன்.”

தேவ குரல்: “நீ நிர்வாணி என்று உனக்கு சொன்னது யார்? விலக்கப்பட்ட கனியைப் புசித்தாயோ?”

ஆதாம் : “ஏவாள் அதை எனக்குக் கொடுத்தாள்.”

ஏவாள் : “சர்ப்பம் என்னிடம் பொய் கூறியது. அது அந்தப் பழம் எங்களுக்கு நல்லது என்று கூறியது.”

கதை கூறுபவர்: ஆதி. 3:14-24 லிருந்து கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும். பின், “தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் விலங்குகளின் தோலால் ஆடை செய்து கொடுத்தார். அவர் கூறுவதைக் கேளுங்கள்.”

தேவ குரல்: “சர்ப்பமே! நீ மண்ணில் நகர்வாய்! ஏவாளின் சந்ததியில் ஒருவர் உன் தலையை நசுக்குவார். ஏவாளே நீ எனக்குக் கீழ்ப்படிய வில்லை. பிரசவத்தின் போது உனக்கு வேதனை இருக்கும். ஆதாமே! நீ கடுமையாக உழைத்தே உணவைப் பெறுவாய். போங்கள்! இனி நீங்கள் என்னோடு தோட்டத்தில் இருக்க முடியாது.”

தேவ தூதன்: வாளை ஆதாமை நோக்கி வீசி கூறுவது, “நீ தேவனை மீறினாய். நீ என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டிய தேவ பிரசன்னத்தில் இனிமேலும் இருக்க முடியாது.”

கதை கூறுபவர்: நாடகத்தை அரங்கேற்ற உதவியவர்களுக்கும் கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறல்.

கேள்விகள்: இந்த நாடகத்தை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே உள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**உதாரணம்:** ஒரு குழந்தை ஒரு பெரிய சாக்கை தன் முதுகில் கயிற்றால் கட்டவும். அவன் பலரிடம் போய் "இந்த வேதனைதரும் பாவ பாரத்தை எப்படி நீக்குவது." என்று கேட்கிறான். (அவர்கள் பதில் கூறட்டும்). ஒரு கத்தியை வைத்துக் கொண்டிருக்கும் இன்னொரு குழந்தை விளக்குகிறது, "இந்த கர்த்தரின் வாள் தேவ வார்த்தை. இது, இயேசுவின் இரத்தம் பாவங்களை கழுவும் என்று கூறுகிறது (கயிற்றை வெட்ட அல்லது அவிழ்க்க சாக்கு கீழே விழுகிறது)"

குழந்தைகள் ஒரு பழம் அல்லது பாம்பின் படத்தை **வரைந்து** ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு காட்டி, எவ்வாறு சாத்தான் நம்மை சோதிக்கிறான் என்பதை இது காட்டுகிறது என்று விளக்க வேண்டும்.



**மனப்பாடம்:** பெரிய பிள்ளைகள் : ரோமர் 5:12; சிறுவர்கள் ரோமர் 3:23.

**விவாதம் :** "இன்று மக்கள் எந்த வழிகளில் எல்லாம் தேவனுக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள்?" – சிறுவர்களிடம் கேட்கவும்.

**சங்கீதம் :** சங். 53:1–3 வசனங்களை மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கவும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! நாங்கள் பல வேளைகளில் உமக்குக் கீழ்ப்படியவில்லை. நாங்கள் சாத்தானின் அடிமைகள் ஆனோம். ஏவாளின் ஒரு சந்ததியான இயேசுவை அனுப்பி சாத்தானின் தலையை நசுக்கி எங்களை விடுவித்ததற்கு நன்றி."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net